**2019 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05.08.2019 ம் தேதி திங்கட் கிழமை முற்பகல் 12.30 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற இயல்புக் கூட்டப் பொருள்**

---

1) திண்டுக்கல் மாநகராட்சிக்கு மாண்புமிகு பிரதமர் அவர்களின் நீர்சேமிப்பு முக்கியத்துவம் குறித்து (Jal Sakthi Abiyan) ஒரு இயக்கமாக அறிவித்து பொதுமக்களின் பங்களிப்புடன் மழைநீர் சேகரிப்பினை மேற்கொள்ளவும் அதன்படி, 01.07.2019 முதல் நீர் மேலாண்மை இயக்கத்தின் குறிக்கோள்களை முழுமையாக அடையும் வகையில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக திண்டுக்கல் மாநகராட்சிக்கு ஜல்சக்தி அபியான் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் மூலம் அமர்த்தப்பட்ட குழுக்கள் திண்டுக்கல் மாவட்டத்தின் நீர்நிலைகளை ஆய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் அவர்களுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்குரிய வாடகை கட்டணமாக ரூ.71,739/- (எழுபத்தி ஓராயித்து எழுநூற்றி முப்பத்தொன்பது மட்டும்) செலுத்த மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து வரப்பெற்றுள்ள செலவு சீட்டு கீழ்க்கண்டவாறு

| SL.NO | BILL NO | VEHICLE NO | BILL AMOUNT |
|---|---|---|---|
| 1 | 570 | TN 69 – AE 4098 | Rs. 24,549/- |
| 2 | 566 | TN 55-AE 9000 | Rs.24.090/- |
| 3 | 564 | TN 57 –AD2629 | Rs. 23,100/- |

மேற்கண்ட தொகை ரூ. 71,739/- மாவட்ட ஆட்சித்தலைவர்,திண்டுக்கல் அவர்களுக்கு காசோலையாக வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.6852/2016/F3)**

**அலுவலக குறிப்பு..**

மேற்கண்ட செலவினங்களுக்கு பொது நிதியில் இருந்து செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

2) இம்மாநகராட்சியில் கல்வி நிதி 2019-2020 ன் கீழ் மாநகராட்சிக்குச் சொந்தமான மாநகராட்சிப் பள்ளிகளில் உள்ள சத்துணவு மையங்கள் மராமத்துப் பணிக்கு 17.07.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ.எண் | ஒப்பந்தக்காரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.டி.முருகேசன் | 0.03% மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.5000/- மதிப்புள்ள வங்கி வரைவோலை |
| 2. | திரு.எம்.சுப்ரமணி | 10.17% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.5000/- மதிப்புள்ள வங்கி வரைவோலை |

(ந.க.எண்.271/2013/இ4)

**அலுவலக குறிப்பு**

1. ரூ.5,00,000/- மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப்பணிக்கு மாமன்றத் தீர்மான எண்.1586, நாள் 28,06,2019 இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.டி.முருகேசன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தகாரர் திரு.டி.முருகேசன் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

---

3) இம்மாநகராட்சியில் பொது நிதி 2019-2020 ன் கீழ் காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள தங்கும் விடுதியினை வணிக வளாகமாக மாற்ற உரிய கட்டுமான பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 02.08.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ.எண் | ஒப்பந்தக்காரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.எ.மோகன் | 0.03% மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.9500/- மதிப்புள்ள தேசிய சேமிப்பு பத்திரம் |
| 2. | திரு.எ.நாட்ராயன் | 9.52% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.9500/- மதிப்புள்ள தேசிய சேமிப்பு பத்திரம் |

(ந.க.எண்.271/2013/இ4)

**அலுவலக குறிப்பு**

1. ரூ.9,50,000/- மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப்பணிக்கு மாமன்றத் தீர்மான எண்.1647, நாள் 10.07.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எ.மோகன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

---

4) திண்டுக்கல் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் பணிகள் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 2004-ம் ஆண்டு இரண்டு கட்டமாக (phase I & II) வும் அவற்றினை நான்கு பிரிவுகளாகவும் (Block I,II,III and IV) மேற்கொள்ள திட்டமிடப்பட்டு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மாநகராட்சியின் அப்போதைய நிதி நிலையைக் கருத்தில் கொண்டு முதற்கட்டமாக மூன்று பிரிவுகளில் (Block II,III and IV) இத்திட்டத்தினை செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண். 400(D) MA3, நாள். 23.09.2005-ன் படி ரூ. 23.76 கோடி நிர்வாக அனுமதி பெறப்பட்டு பின்னர் ரூ.46.15 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதியினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை அரசாணை எண். 554 (D) MA2, நாள். 30.12.2009-ன் படி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி, பணி நிலவியல் தன்மைக்கு ஏற்ப பணியினை மூன்று சிப்பங்களாக வார்டு எண். 2,3,4,5,6,7,8,9,11(பகுதி), 12, 13,14,15,16,19,20,21,22(பகுதி), 24,25,26(பகுதி) , 27(பகுதி) 28(பகுதி) மற்றும் 38 (பகுதி) –ல் பாதாள சாக்கடை அமைக்கும் பணியும், பள்ளப்பட்டி கிராமத்தில் 13.65 MLD கொள்ளளவு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் அமைக்கப்பட்டு தற்போது இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

திண்டுக்கல் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தாமல் விடுபட்ட வார்டுகளான 1,5(பகுதி), 10,11(பகுதி), 15(பகுதி), 16(பகுதி), 17,18, 19(பகுதி), 22(பகுதி), 23,24 (பகுதி), 26(பகுதி), 27(பகுதி), 28 (பகுதி) 29,30,31(பகுதி), 32,33,34,35,36,37,38(பகுதி), 39,40,41,42,43,44(பகுதி), 45,46,47,48 ஆகிய வார்டுகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த விரிவான திட்ட மதிப்பீட்டினை தனியார் கலந்தாலோசகரை நியமித்து திட்ட மதிப்பீடு தயார் செய்யவும், அதற்கான நிதியினை PDGF மூலம் வழங்க கோரவும், மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2855/2013/இ4)**

<u>அலுவலக குறிப்பு..</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

திண்டுக்கல் மாநகராட்சியின் அங்கீகக்கப்பட்ட ஒப்பந்த பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரருக்கு வழங்கும் ஒப்பந்த படிவம் **(ARTICLES OF AGREEMENT)** கடந்த இருபது வருடங்களாக படிவம் ஒன்றுக்கு ரூ.5.00 ஆகவும் மற்றும் பணிப்பதிவேடு **(S.R)** ரூ.50.00 ஆகவும் வழங்கப்பட்டு வந்தது. தற்போது மாநகராட்சியாக தரம் உயத்தப்பட்டுள்ளதால், மேற்படி ஒப்பந்த படிவத்தினை படிவம் ஒன்றுக்கு ரூ.5.00-லிருந்து 100.00 ஆகவும், பணிப்பதிவேடு ரூ.50.00-லிருந்து ரூ.100.00 ஆகவும் உயர்த்தி விநியோகம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

(ந.க.எண்.6828/2019/டி1)

<u>அலுவலகக் குறிப்பு</u>

அனுமதி வழங்கலாம்.

**கண்காணிப்பாளர்**

**தனி அலுவலர் / ஆணையர்(பொ),**
**திண்டுக்கல் மாநகராட்சி**

**மாமன்றப்பொருள்**

திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஆர்.எம்.காலனி 80 அடி ரோட்டின் சந்திப்பில் ( நான்கு ரோடு சந்தில்) உள்ள பூங்காவின் பிரதான நுழைவு வாயிலுக்கு மேற்குப்பக்கத்தில் மாநகராட்சிக்கு கட்டுப்பட்ட சாலை இடத்தில் 10′ X 8′ என்ற அளவில் ஆவின் பாலகம் அமைக்க டிடி 160 திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மேலாளர் அவர்கள் கடந்த 03.07.2018 தேதிய கடிதத்தில் அனுமதி கோரியுள்ளார். மேற்படி, கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.7526/2019/F3)**

**அலுவலக குறிப்பு..**

திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஆர்.எம்.காலனி 80 அடி ரோட்டின் சந்திப்பில் ( நான்கு ரோடு சந்தில்) உள்ள பூங்காவின் பிரதான நுழைவு வாயிலுக்கு மேற்குப்பக்கத்தில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு கட்டுப்பட்ட சாலை இடத்தில் ஆவின் பாலகம் 10′ X 8′ என்ற அளவில் அமைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மாமன்றம் அனுமதிக்கலாம்.

1. அரசாணை எண். 460, வருவாய் துறை நாள். 04.06.1998-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தரை வாடகையினை நிலத்தின் வழிகாட்டி மதிப்பீட்டின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு மாத வாடகை ரூ.1,000/- என்ற விகிதத்தில் வாடகை நிர்ணயம் செய்யலாம்.
2. ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு நில வாடகைக்கு அனுமதி வழங்கு ஒப்புதல் அளிக்கலாம்.
3. போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் எந்தவித இடையூறும் ஏற்படாத வகையில் சாலையின் கிழக்கு எல்லையொட்டி 10′ X 8′ க்கு மிகாமல் பெட்டி அமைக்கப்பட வேண்டும். கூடுதலான அளவில்

பெட்டி அமைத்தாலோ, வேறு ஆக்கிரமிப்பு ஏதேனும் செய்தாலோ அனுமதியுடன் ரத்து செய்து பெட்டியும் அப்புறப்படுத்தப்படும்.

4. மேற்படி, ஆவின் பாலகத்தில் பால் மூலம் தயார் செய்யப்படும் ஆவின் பாலக பொருட்கள் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். இதர பொருட்கள் விற்பனை செய்தால் ஆவின் நிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும். மேலும், உள்வாடகைக்கு விடக்கூடாது.
5. மின் இணைப்புத் தேவைப்படுமெனில் சொந்த செலவில் ஆணையர் பெயரில் பெறப்பட வேண்டும். அதற்கான மின்கட்டணத்தை தாங்களே செலுத்த வேண்டும்.
6. மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் சாலை விஸ்தரிப்புப் பணிகளின் போது பெட்டியை அப்புறப்படுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எவ்வித நீதிமன்ற வழக்குகளுக்கும் செல்லக்கூடாது.
7. மேற்படி, இடத்தில் ஆவின் பாலகம் அமைக்க ஒரு ஆண்டிற்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. ஆவின் பாலகம் தொடர்ந்து நடத்த விரும்பினால் உரிமம் முடிவுறும் மூன்று மாதத்திற்கு முன்பே விண்ணப்பம் அளித்து மீண்டும் உரிமம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.
8. ஆவின் பாலக கடைக்கு நிலவாடகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஒரு வருடத்திற்கான வாடகை 1000 X 12= 12,000/- மற்றும் காப்புத் தொகையாக ரூ.10,000/- (Security Deposite) முன் வைப்புத்தொகையாக செலுத்த வேண்டும்.
9. சுகாதாரமான முறையில் பொருள்கள் விற்பனை செய்யப்பட வேண்டும். பாலகத்திலிருந்து உண்டாகும் கழிவுப்பொருட்கள், குப்பைகள் சுகாதார ஆய்வாளரின் அறிவுறுத்தலின்படி அப்புறப்படுத்த வேண்டும்.

10. தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிக்க கூடாது. மீறி உபயோகித்தால் உத்திரவு ரத்து செய்யப்படும்.
11. மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்படுவதாக ரூ.20/- முத்திரை தாளில் உறுதிமொழி வழங்கப்பட வேண்டும்.

முதுநிலை நகரமைப்பு அலுவலர்　　　　　ஆணையர் மற்றும் தனிஅலுவலர்

**மாமன்றப்பொருள்**

திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட கோபால சமுத்திரத்தினை தூய்மையாகவும், பாதுகாப்பாக பராமரிக்கவும் NEXUS அட்வர்டைசிங் நிறுவனத்தார் மேற்படி, பராமரிப்பு பணியினை ஏற்றும் பாதுகாவலர்களை நியமித்து பாதுகாக்கவும், மேற்படி இடத்தில் ஒளி விளம்பரப்பலகை வைப்பதற்கு அனுமதி கோரியுள்ளனர். மேற்கண்ட நிறுவனம் நல்லமுறையில் குளத்தினையும் அதைச்சுற்றியுள்ள நடைபாதையினையும் பராமரித்து வருவதால் 26.05.2018 முதல் 25.05.2021 வரை ஏற்கனவே உள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

1. மனுவில் கோரியவாறு 4’X2’ அளவிற்குள் மட்டுமே விளம்பரங்கள் இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு கூடுதலாக அமைக்க கூடாது.
2. கோபால சமுத்திரம் பகுதி நடை பயணம் மேற்கொள்ள ஏதுவாக தினசரி இருவேளையும் சுத்தம் செய்ய வேண்டும்.
3. போதுமான பாதுகாவலர்கள் சுழற்டிச முறையில் அமைக்க வேண்டும்.
4. பாதுகாவலர்கள் மற்றும் துப்புரவுப் பணி மேற்கொள்ளும் நபர்களுக்கான ஊதியம் மற்றும் சேமநலநிதி முதலானவற்றை மனுதாரரே சொந்த செலவில் ஏற்க வேண்டும்.
5. மாநகராட்சி பொறியாளர் மற்றும் மாநகராட்சி சுகாதார அலுவலர்கள் அறிவுரைப்படி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். திறந்து வைக்கும் நேரம் மற்றும் இதர விபரங்களை அறிவிப்பு பலகையாக வைக்க வேண்டும்.
6. பராமரிப்பு பணிகளில் கவனக்குறைவு தென்பட்டால் எவ்வித முன்னறிவிப்பின்றி அனுமதி ரத்து செய்யப்படும்.
7. விளம்பரப்பலகைகள் மாநகராட்சி நகரமைப்பு அலுவலர், மாநகராட்சி செயற்பொறியாளரின் மேற்பார்வையில் மட்டுமே அமைக்க வேண்டும்.
8. குளக்கரையில் போதுமான அளவு கூடுதல் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.47, நாள். 26.06.2003 ( உள்ளாட்சித்துறை) –ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு விளம்பர போர்டு அமைக்க வேண்டும்.

10. நிலவாடகை மேலும் விளம்பரவரி ஆண்டுக்கு ரூ. 8,000/- வீதம் மாநகராட்சி கணக்கில் செலுத்தப்பட வேண்டும். மாநகராட்சியில் வரி செலுத்திய பிறகே இறுதி அனுமதி வழங்கப்படும்.
11. மின் இணைப்பு ஆணையாளர், திண்டுக்கல் மாநகராட்சி பெயரில் மனுதாரர் பெற்றுக்கொண்டு மின்கட்டணம் முறைப்படி, மனுதாரரால் செலுத்தப்பட வேண்டும்.
12. அமைக்கப்படும் விளம்பரங்களில் 50% க்கு குறையாமல் மாநகராட்சிக்கு தொடர்புடைய மாநகராட்சியால் தெரிவிக்கும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உள்ள விளம்பரமும் செய்யப்பட வேண்டும்.
13. அரசியல் சார்ந்த விளம்பரங்களோ, பொதுமக்கள் அருவுறுக்கத்தக்க வகையிலான விளம்பரங்களோ அரசுக்கு எதிரான வாசகங்களோ இடம் பெறக்கூடாது.
14. விளம்பரங்கள் செய்வதற்கு மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
15. எவ்வித நீதிமன்ற நடவடிக்கையும் மாநகராட்சிக்கு எதிராக தொடரக்கூடாது.
16. மேற்கண்ட நிபந்தனைகள் மீறப்படும்போது வழங்கப்படும் அனுமதியினை ரத்து செய்ய மாநகராட்சியால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
17. மாநகராட்சிப்பொறியாளர்களின் முன்னிலையில் அவர்கள் சான்றளிக்கும் வகையில் தரமான பொருட்களால் உரிய ஸ்திரத்தன்மையுடன் (stability) விளம்பரப்பலகை அமைக்கப்பட வேண்டும்.
18. அனுமதி வழங்கிய ஓராண்டு காலத்திற்குள் ஏதேனும் குறைபாடுகள் கண்டறியப்பட்டால் எவ்வித முன்னறிவிப்புமின்றி அனுமதி மாநகராட்சியால் ரத்து செய்யப்படும்.
19. பணி செய்யும் போது எவ்விதமான சேதம் ஏற்பட்டாலும் சம்பந்தப்பட்ட நிறுவனம் சரிசெய்து கொடுக்க வேண்டும்.
20. மேற்காணும் நிபந்தனைகளை மனுதாரர் ஒப்புக்கொண்டு ஒப்பந்தம் சமர்பிக்கப்பட வேண்டும்.

**(ந.க.எண். 19879/2016/எப்3)**

அலுவலக குறிப்பு..

மாமன்றம் அனுமதிக்கலாம்.

முதுநிலை நகரமைப்பு அலுவலர் ஆணையர் மற்றும் தனிஅலுவலர்

**மாமன்றப்பொருள்**

முதுநிலை நகரமைப்பு அலுவலர்　　　　ஆணையர் மற்றும் தனிஅலுவலர்

திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் வசிக்கும் மக்கள் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரியினங்களின் விபரம் குறித்தும் உடன் வரி மற்றும் வரியற்ற இனங்கள் செலுத்த கோரியும் மாநகராட்சிக்கு வரி செலுத்துவோரின் அலைபேசி எண்ணிற்கு பி.எஸ்.என்.எல் நிறுவனம் மூலம் Bulk SMS வசதிகள் ஓராண்டிற்கு பெறுவதற்கு செலுத்தவேண்டிய உத்தேச செலவினம் ரூ.25,000/- (இருபத்தி ஐந்தாயிரம்)க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.7226/2016/அ1

அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. செலவினம் ரூ.25,000/- மாநகராட்சியின் 2019-20ம் ஆண்டின் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.